பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
23 07 2024 **TUESDAY** 6 45 **AM**
வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நடப்பு நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டை, நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் மக்களவையில் இன்று தாக்கல் செய்கிறார்.
- நீட் நுழைவுத் தேர்வின் இயற்பியல் கேள்வி ஒன்றுக்கு, இரண்டு தெரிவுகளை சரியான பதிலாக கருதும் தேசிய தேர்வு முகமையின் முடிவு குறித்து, தில்லி ஐஐடி-யின் நிபுணர் குழு கருத்து தெரிவிக்குமாறு உச்சநீதிமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது.
- பங்களாதேஷில் இடஒதுக்கீடு தொடர்பாக வன்முறை ஏற்பட்டதை அடுத்து தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்று தமிழகத்தைச் சேர்ந்த 82 மாணவர்கள் சென்னை வந்தடைந்தனர்.
- தமிழகத்தில் சுற்றுலா துறையில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு வழங்கப்படும் விருதுகளுக்கு விண்ணப்பிக்குமாறு மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது
- ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

நடப்பு நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டை, நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் மக்களவையில் இன்று தாக்கல் செய்கிறார்.

நிதியமைச்சராக பொறுப்பு வகிக்கும் அவர் தொடர்ந்து ஏழாவது முறையாக பட்ஜெட் தாக்கல் செய்கிறார்.

இதுதொடர்பாக வேளாண் சங்க பிரதிநிதிகள், வேளாண் பொருளாதார நிபுணர்கள், வர்த்தக சங்கங்கள், கல்வி, சுகாதாரத்துறை, சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை, கட்டமைப்பு, எரிசக்தி, நகர்ப்புற வளர்ச்சித்துறை உள்ளிட்ட துறைகளின் பிரதிநிதிகளுடன் அவர் ஆலோசனை நடத்தியுள்ளார்.

பட்ஜெட்டை தாக்கல் செய்து திருமதி. நிர்மலா சீதாராமன் உரையாற்றும் நிகழ்வை, அகில இந்திய வானொலி காலை 11 மணி முதல் நேரடி ஒலிபரப்பு செய்கிறது.

இதன் காரணமாக, மதியம் 12.40 மணிக்கான ஆகாஷவாணி செய்தி அறிக்கை பிற்பகல் 1.50-க்கு ஒலிபரப்பாகும்.

திருச்சியிலிருந்து ஒலிபரப்பாகும் மாநில செய்தி அறிக்கை, பிற்பகல் மணி 1.45-க்கு பதிலாக பிற்பகல் 3 மணிக்கு ஒலிபரப்பாகும்.

பட்ஜெட் குறித்த சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு, சென்னை அகில இந்திய வானொலியின் செய்திப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

இரவு எட்டரை மணிக்கு நேரலையில் ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியில், பொருளாதார நிபுணர் கௌரி, பத்திரிகையாளர் ஜெகந்நாதன் மற்றும் ஊடகவியலாளர் சியாமளா பங்கேற்கின்றனர்.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>><<<<<

புதிய கல்விக் கொள்கையில் தாய்மொழி கற்பித்தலுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், தமிழ் உள்ளிட்ட ஆறு மொழிகளுக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

மத்திய செம்மொழி தமிழ் மையத்தின் மூலம் தமிழ் மொழியின் மேம்பாட்டுக்கான பணிகள் நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

இவற்றின் வளர்ச்சிக்காக உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்தார்.

>>>>><<<<<

கடந்த ஜூன் மாதம் 4ஆம் தேதியன்று பங்குச்சந்தையில் சுமார் 30 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு வீழ்ச்சி அடைந்திருந்தாலும், அது ஐந்து நாட்களுக்குள் சீரடைந்துவிட்டதாக மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இம்மாதம் 18ஆம் தேதி நிலவரப்படி, பங்குச்சந்தையின் மதிப்பு 59 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

பங்குச்சந்தை வீழ்ச்சியின் மூலம் முறையற்ற வர்த்தகம் நடைபெற்றதாக எந்த தகவலும் இந்திய பங்குச்சந்தை மற்றும் பரிமாற்ற வாரியத்திற்கு கிடைக்கவில்லை என்று திரு. பங்கஜ் சௌத்ரி கூறினார்.

**>>>>><<<<<**

இளநிலை மருத்துவ பட்டப்படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வின் இயற்பியல் கேள்வி ஒன்றுக்கு, இரண்டு தெரிவுகளை சரியான பதிலாக கருதும் தேசிய தேர்வு முகமையின் முடிவு குறித்து, தில்லி ஐஐடி-யின் நிபணர் குழு கருத்து தெரிவிக்குமாறு உச்சநீதிமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதுகுறித்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான அமர்வு, இன்று நண்பகல் 12 மணிக்குள் நிபுணர்கள் தங்கள் கருத்தை உச்சநீதிமன்றத்தின் பதிவாளரிடம் சமர்ப்பிக்குமாறு கூறியுள்ளது.

தெளிவற்ற இயற்பியல் கேள்வியின் மூலம் கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டதால், 44 மாணவர்கள் முழு மதிப்பெண் பெற்றது குறித்து மனுதாரர்கள் வழக்கு தொடர்ந்தனர்.

நீட் தேர்வுக்கு **NCERT**–யின் புதிய பாடப்புத்தகங்களை கற்குமாறு தேசிய தேர்வு முகமையின் தகவலுக்கு முரணாக இந்த முடிவு அமைந்துள்ளது என்று மனுதாரர்கள் கூறியுள்ளனர்.

இதுகுறித்த வழக்கு இன்று நடைபெறவுள்ளது.

**>>>>><<<<<**

கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திலிருந்து பயணம் மேற்கொள்ளும் பயணிகள் நள்ளிரவு 12 மணிக்கு முன்பாகவே தங்கள் பயணத்தை திட்டமிடுமாறு மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் நேற்று ஆய்வு மேற்கொண்ட அவர் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

பயணிகளின் பாதுகாப்பு கருதி, நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 4 மணிவரை குறைவான எண்ணிக்கையில் பேருந்துகள் இயக்கப்படுவதாக திரு. சிவசங்கர் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

பங்களாதேஷில் இடஒதுக்கீடு தொடர்பாக நடைபெற்ற போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டதை அடுத்து அங்கு பயின்று வரும் இந்திய மாணவர்கள் தாயகம் திரும்பி வருகின்றனர்.

தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்று தமிழகத்தைச் சேர்ந்த 82 மாணவர்கள் சென்னை வந்தடைந்தனர்.

சென்னை, விழுப்புரம் கிருஷ்ணகிரி, கடலூர், தருமபுரி, தஞ்சாவூர், சேலம், வேலூர், ராணிப்பேட்டை, மதுரை உள்ளிட்ட 18 மாவட்டங்களைச் சேர்ந்த இந்த மாணவர்கள், அவர்களுடைய சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>><<<<<**

தமிழகத்தில் சுற்றுலா துறையில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு வழங்கப்படும் விருதுகளுக்கு விண்ணப்பிக்குமாறு மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இதற்கான விண்ணப்பத்தை **www.tntourismawards.com** என்ற இணையதளத்தில் ஆகஸ்ட் மாதம் 20ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 17 பிரிவுகளில் தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு சுற்றுலா துறையால் உலக சுற்றுலா தினத்தன்று விருதுகள் வழங்கப்படும் என்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

பெண் கல்வியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மத்திய அரசு பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளை படிக்க வைப்போம் என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு முன்னெடுப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இது குறித்து, சேலம் தனியார் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய மத்திய மக்கள் தொடர்பக மண்டல இயக்குநர் திருமதி. லீலா மீனாட்சி, பெண் கல்வியின் அவசியத்தை கிராமங்கள் தோறும் எடுத்துரைத்து வருவதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - லீலா மீனாட்சி 28 செகண்ட்ஸ்)

இந்நிகழ்ச்சியின் மூலம் பெண் குழந்தைகளுக்கான உதவி எண் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை தாங்கள் அறிந்து கொண்டதாக மாணவிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - மாணவிகள் 23 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

இருவரிச் செய்திகள்

சீனாவின் **Sichuan** மாகாணத்தில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி, 14 பேர் உயிரிழந்தனர்.

**>>>>><<<<<**

பங்களாதேஷில் நடைபெற்ற இடஒதுக்கீடு தொடர்பான வன்முறைக்கு எதிர்க்கட்சிகளே காரணம் என்று அந்நாட்டு பிரதமர் திருமதி. ஷேக் ஹசீனா குற்றம் சாட்டியுள்ளார்.

**>>>>><<<<<**

கடந்த நிதியாண்டில் நிலக்கரி உற்பத்தி 11 புள்ளி ஆறு ஐந்து சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**>>>>><<<<<**

கன்வார் யாத்திரை வழித்தடத்தில் வணிகம் செய்யும் வியாபாரிகள் தங்களுடைய பெயர் பலகைகளை வைக்க வேண்டும் என்ற உத்தரபிரதேசம் மற்றும் உத்ராகண்ட் மாநில அரசுகளின் உத்தரவுகளுக்கு, உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

>>>>><<<<<

கன்னியாகுமரி மாவட்டத்தில் போதைப்பொருள் புழக்கம் குறித்த புகார்களை 1 0 5 8 1 மற்றும் 8 1 2 2 9 3 0 2 7 9 என்ற வாட்ஸ்ஆப் எண்ணில் தெரிவிக்கலாம் என்று ஆட்சியர் திருமதி. அழகுமீனா தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

பெரம்பலூர் மாவட்டம், செங்குணம், அய்யலூர், கால்பாடி, கவுள்பாளையம் கிராம மக்களுக்கான மக்களுடன் முதல்வர் திட்டத்தின் சிறப்பு முகாம் இன்று கவுள்பாளையத்தில் நடைபெறுகிறது.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், நிதியுதவி பெற விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட 556 மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆட்சியர் திரு. பிரசாந்த் அலுவலர்களை அறிவுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

தென்காசியில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 3 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. கமல் கிஷோர் வழங்கினார்.

>>>>><<<<<

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருகே பள்ளி வாகனமும், இரு சக்கர வாகனமும் மோதிக்கொண்ட விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

தம்புலாவில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

முன்னதாக நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில் பாகிஸ்தான் - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் இலங்கை, 144 ரன் வித்தியாசத்தில் மலேசியாவையும், பங்களாதேஷ் 7 விக்கெட் வித்தியாசத்தில் தாய்லாந்தையும் வென்றன.

>>>>><<<<<

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி 14 ரன் வித்தியாசத்தில் திருச்சி அணியை வென்றது.

திருநெல்வேலியில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 198 ரன் எடுத்தது.

199 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய திருச்சி அணி, 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 184 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மதுரை – கோவை அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<